


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (09.09.2023) சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற 50 மருத்துவக் கல்லூரிகளுக்கு இடையான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மருத்துவ மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# நாடாளுமன்றத் தேர்தலில் கண் துஞ்சாது கழகப் பணியாற்றிடுவோம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் பங்கேற்ற சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப்.10-

'நாளையே தேர்தல்; நாற்பதும் நமதே நாடும் நமதே' என்ற கழகத் தலைவரின் கரங்களுக்கு வலுசேர்க்க கண் துஞ்சாது கழகப் பணியாற்றிடுவோம்' என்று தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அது பற்றிய விவரம் வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட & மாநகர தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம் 07.09.2023 அன்று சென்னை இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர்; நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணை பொதுச்செயலாளர்; அணி பொறுப்பாளர் அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ். மஸ்தான், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில துணைச் செயலாளர்கள் அன்வர் கான், நூருல்லா, விஜகுமார், ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல், ஜோசப் ராஜ், முனவர்ஜான், ரஃபி அகமது மற்றும் நாகை மு.ஷாகுல் அமீது ஆகியோர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில், மறைந்த கழக முன்னோடிகளுக்கு இரங்கல் தெரிவித்தல், சிறுபான்மையினர் மக்களின் நலன் காக்க நாளும் உழைக்கும் முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களுக்கும், கழக இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி அறிவித்தல், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் செயல்பாடுகளை திறம்பட ஒருங்கிணைத்திட அணி சார்பாக தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கழகத்தின் பவள விழாவினை ஆண்டு முழுவதும் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாட கழக மாவட்டங்கள் 10 மண்டலங்களாக பிரித்திட்டும், தலைமைக் கழக ஒப்புதலுடன் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் பகுதி, வட்ட, நகர, ஒன்றிய பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டுமெனவும், அணியின் அணைத்து நிலைகளிலும் பெண்களை நிர்வாகிகளாக பங்கெடுக்கச் செய்தல், கழக பவள விழா இளைஞரணி மாநாடு ஆகியவற்றில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பாக முழு முனைப்புடன் பங்கேற்பது மற்றும் 'நாற்பதும் நமதே நாடும் நமதே' என்ற தலைவரின் இலட்சிய கொள்கைக்கு வலு சேர்க்கும் நோக்குடன் செயல்பட்டு இந்தியா கூட்டணியின் வெற்றிக் கரங்களுக்கு உழைத்திட வேண்டுமென்ற பல முக்கிய தீர்மானங்கள் கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களின் முன்னிலையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இதில், தமிழ்நாடு முழுவதிலும் இருந்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் திரளாக பங்கேற்றனர்.

## டி.ஆர்.பாலு எம்.பி, முனைவர் கோவி.செழியன், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை !

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் !

## வே.கருணாநிதி தலைமை ! இ.கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்பு!

சென்னை செப்:10

காஞ்சி வடக்கு மாவட்டம், பம்மல்தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (10.9.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் இரட்டை பிள்ளையார் கோவில் அருகில் பம்மலில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் கூட்டத்திற்கு பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளரும் 1வது மண்டல குழு தலைவருமான வே.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.வட்டக் கழகச் செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன், கல்யாணி டில்லி எம்.சி, வி. கே.செல்வி, எஸ்.வெங்கடேஷ், பி.ஜே.சூரியப்பன், கே.சிவசுப்பிரமணியன், அ.ஆதித்தன், எல்.குணசுந்தரி, எம்.எஸ். கஜேந்திரன், வி.சங்கர், சு. நரசிம்மதிர வியக்குமார், து.நந்தகுமார், ம. வேலம்மை ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

பேராசிரியர் எல்.பிரபு, அவைத் தலைவர் ப. காமேஸ்வரன், பகுதி பொருளாளர் ஆர்.உமா சங்கர், என்.பன்னீர்செல்வம், பா.கவிதா, பா. டில்லி, பி.ஜே.வேந்தன், என்.கே.ரவிச்சந்திரன், இரா.கந்தவேலு, ஆர். கோகுல், சு.மனோகரன் க.சம்பத் ஆகியோர் முன்னிலை விக்கின்றனர்.

கூட்டத்தில் அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர்தா.மோ.அன்பரசன் ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், தலைமை கழக பேச்சாளர் மு.எ.முகமதுஇப்ராஹிம், வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், பொதுக்குழு உறுப்பினர் எஸ். சதீஷ், இரா.நரேஷ் கண்ணா, எஸ்.கே.நெப்போலியன், பி.கே.எ. சத்ய பிரபு, வி.ரவிச்சந்திரன்,

மாமன்ற உறுப்பினர்கள் எ.மதினா பேகம், மு. இன்பசேகரன், ரம்யா சத்திய பிரபு, சத்யா மதியழகன், வட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணா வெங்கடேசன், என். காந்தி, எச் முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர், உள்ளிட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

பம்மல் தெற்கு பகுதி துணைச் செயலாளர் துரை.இளங்கோவன் நன்றியுரை ஆற்றுகிறார்.

## எம்.கே.பி.அண்ணாதாசன் தலைமை! ஆ.மாலினி எம்.சி. முன்னிலை!

# முகப்பேர் பி.சுந்தரராஜன் - எஸ். ரத்தினம் இல்ல மணவிழா வரவேற்பு!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ.-ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., - நொளம்பூர் வே. ராஜன் வாழ்த்துரை!

சென்னை, செப். 10-

சென்னை முகப்பேர் மேற்கு பி. சுந்தரராஜன் - எஸ். ரத்தினம் ஆகியோரது புதல்வி எஸ். சந்தானலட்சுமிக்கும் ஜி.வாசுதேவன் எஸ்.அஞ்சலிதேவி ஆகியோரின் புதல்வர் வி.விக்னே சுக்கும் மணவிழா வரவேற்பு இன்று (10.09.2023-ஞாயிறு) மாலை 7 மணியளவில் முகப்பேர் மேற்கில் அமைந்துள்ள தங்கமணி மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா நாளை (11.9.2023 - திங்கள்) காலை 6 மணியளவில் பம்மல் சங்கர் நகரில் உள்ள ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்பன் கோவிலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்புக்கு வட்டச் செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசன் தலைமை வகிக்கிறார்.

டி.தாமோதரன், பி. ராஜேந்திரன், எம்.செல்வகுமார், ஏ.அப்பாசாமி, எஸ். கஜலட்சுமி ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஆ.மாலினி எம்.சி.ஆர். ரசூல்தீன், ஆர். ராக்கேஷ், ஆர்.அமுதா ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., நௌம்பூர் வே. ராஜன் எம்.சி., பி.கே. மூர்த்தி எம்.சி. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும், கே. குமரேசன், எம்.கே. செந்தில் சுரேஷ், தீ.பாலாஜி, எம்.உதயகுமார், எம்.கி.சேகர், கே.வி. திலகர் எம்.சி., எல்.பி.எப். மோகன், ப.ஆலன், எம்.எம். ஜெ.ரத்தினம், எஸ்.ஜி.மாதவன், சி.சசிகுமார், எம். இ.ஸ்டாலின் எம்.சி., எம். ரூபன், எம்.சி. எழிலரசு, பி.வி. தமிழ்ச்செல்வன், டாக்டர் எம்.சி. அழகிரி உள்ளிட்ட 91வது வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எஸ்.செண்பகராஜ் நன்றி கூறுகிறார்.

## திருவள்ளூர் மத்திய மாவட்ட

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணியினருக்கு நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர், செப்.10

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக இளைஞர் அணி ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்குவிண்ணப்பித்தவர்கள் நேர்காணவில் கலந்து கொள்ளுமாறு முன்னாள் அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார் .

இது குறித்து விடுத்துள்ள



அறிக்கை வருமாறு:-

கழக தலைவரும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞரணி விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பும்படி திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்காணல் நாளை 11.09.2023 திங்கள் கிழமை மதியம் 2 மணி அளவில் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அன்பகத்தில் நடைபெறுகிறது .

மாநில இளைஞர் அணி நிர்வாகிகள் நேர்காணல் நடத்த உள்ளனர் ஆகவே மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் நேர்காணலில் கலந்து கொள்ள வருகை தரும்பொழுது தங்களுடைய வயதை நிரூபிப்ப தற்குகான கல்வி சான்றிதழ் ஆதார் அட்டை கழக உறுப்பினர் அட்டை சுயவிவர குறிப்பு இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளின் பணியாற்றியிருந்தால் அதன் தொடர்பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கேட்டுக் கொண்டுள்ளார்.

# சந்திரயான் - 3 லேண்டரை படம் பிடித்த சந்திரயான் - 2:

பெங்களூரு, செப் 10-

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முயற்சியால் (இஸ்ரோ) சந்திரனின் தென் துருவத்தில் சந்திரயான்3 விண்கலம் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இதனைச் சாதித்த முதல் நாடு என்ற பெருமையை நமது நாடு கொண்டாடி வருகிறது. விக்ரம் லேண்டரில் இருந்து வெளியேறிய பிரக்யான் ரோவர் நிலனின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்று ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வின் மூலம் நிலவில் இரும்பு, அலுமினியம், சல்பர் உள்ளிட்ட கனிமங்கள் இருப்பதை கண்டறிந்து பிரக்யான் ரோவர் உறுதி செய்தது. இதையடுத்த, 14 நாட்கள் தனது ஆய்வு பணிகளை முடித்துக் கொண்ட ரோவர் உறக்க நிலையில் உள்ளது.

இந்நிலையில், நிலவில் இருக்கும் சந்திரயான் 3ன் லேண்டரை, சந்திரயான் 2 ஆர்பிட்டர் படம் பிடித்துள்ளது. இதனை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. லேண்டரின் புதிய படமானது, சந்திரயான் 2ன் டிஎப் எஸ்ஏஆர் என்ற ரேடார் கருவி மூலம் கடந்த 6ம் தேதி எடுக்கப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. இருள் சூழ்ந்துள்ள நிலவின் தென்துருவ பகுதியில், லேண்டரின் இருப்பிடத்தை சந்திரயான் 2 படம் பிடித்துள்ளது. சந்திரயான்2ன் இந்த ரேடார் கருவி தான், சந்திரயான்3 நிலவின் தென் துருவத்தில் எங்கு தரையிறங்க வேண்டும் என்பதை தொடர்ந்து புகைப்படும் எடுத்து அனுப்பியது.

# பெரும் ஆதரவு பெற்ற தலைவர்: வாக்கெடுப்பு!




இன்று இந்தியா முழுவதும் உள்ள
பிற்படுத்தப்பட்ட இந்துக்கள்
தங்களது நம்பிக்கை நட்சத்திரமாக
உதயநிதி ஸ்டாலின் அவர்களை கொண்டாடி வருகின்றனர்
இந்தியா முழுவதும் உதயநிதி ஸ்டாலின்
கட் அவுட்டுக்கு பாலாபிஷேகம் புஷ்பாஞ்சலி செய்து வருகின்றனர்
வட இந்தியாவிலும் இது நடைபெறுகிறது.
ஊடகங்கள் மக்கள் மத்தியில்
பெரும் ஆதரவு பெற்ற தலைவர்
மோடியா, உதயநிதி ஸ்டாலினா என்று
இணையதளம் மூலம் வாக்கெடுப்பு நடைபெறுகிறது.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (08.09.2023) ஆணையர் அலுவலகத்தில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில்களின் சொத்துகள் விவரம் அடங்கிய இரண்டாவது புத்தகத்தை வெளியிட்டார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ. சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, உயர்மட்ட ஆலோசனை குழு உறுப்பினர் திருமதி தேச மங்கையர்க்கரசி, தனி அலுவலர்கள் ஆலய நிலங்கள்) / மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி கோ.விஜயா, திருமதி சு.ஜானகி, த.குமரேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ.5,171 கோடி -அறநிலையத்துறை மீட்ட சொத்து விவரம்!

## இரண்டாவது புத்தகத்தை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டார்!

சென்னை, செப். 10-

கடந்த 12 ஆண்டுகளாக திருக்கோயில்களுக்கு வரப்பெற்ற பலமாற்று பொன்னினங்களில் பயன்பாடற்ற பொன்னினங்களை ஓய்வுப் பெற்ற நீதியரசர்களின் முன்னிலையில் கணக்கெடுத்து ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி அந்தந்த திருக்கோயில்களின் பெயரில் தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டு அதன் வட்டித்தொகை திருக்கோயிலின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வட்டித்தொகையாக ஆண்டிற்கு ரூ.2.25 கோடியும், இருக்கன்குடி, பெரியபாளையம், திருவேற்காடு மற்றும் மாங்காடு திருக்கோயில் களுக்கு வட்டித்தொகையாக ஆண்டிற்கு ரூ.2.06 கோடியும் கிடைக்கப்பெறு கிறது. இப்படி திருக்கோயி லுக்கு வருமானங்களை பெருக்குகின்ற வகையில் எத்தகைய தடை வந்தாலும் உடைத்தெறிந்து இந்து சமய அறநிலையத்துறை செயலாற்றி வருகிறது.

ஆன்மிகத்தை வைத்து தமிழக மண்ணில் அரசியல் செய்யலாம் என்று நினைத்த சிலருக்கு அது கை கூடவில்லை. இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு 2 ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான திருக்கோ யில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. வரும் 10 ஆம் தேதி நடைபெறும் மேற்கு மாம்பலம், காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு 1,000 ஆவது குடமுழுக்காகும்.

அமைச்சரவை பதவியேற்றபின்போது அனைவருக்கும் ஒரே மாதிரியான உறுதிமொழிதான். ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு உறுதிமொழி என்று இல்லை. எந்த வகையிலும் அரசியல் சாசன சட்டத்தை மீறுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. எங்களுடைய தலைவர்களும் எங்களுக்கு அரசியல் சாசன சட்டத்திற்கு உட்பட்டு தான் செயல்பட வேண்டும் என்று போதித்திருக்கின்றார். ஆகவே எங்களுடைய கோட்பாடுகள், கொள்கை மற்றும் லட்சியங்களிலிருந்து ஒருநாளும் பின்வாங்க மாட்டோம், கட்டுப்பாட்டுக்குள் தான் செயல்படுவோம். ஆகவே எங்கும் அரசியல் சாசன உறுதிமொழியை மீறுகின்ற சூழ்நிலை ஏற்படவும் இல்லை, அப்படி நடந்து கொள்ளவும் மாட்டோம்.

நாங்கள் கருத்தியல் ரீதியான மோதலுக்கு தயாரானவர்களே தவிர இது போன்ற தேவையற்ற வாதங்களுக்கு எங்களை நாங்கள் ஆட்படுத்திக் கொள்வதில்லை. அண்ணாமலைக்கு அவர்களின் பெயரில் இருக்கின்ற ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு உதாரணத்தை கற்பிக்க முடியும். ஆனால் எங்களின் பணி அது அல்ல நாங்கள் மக்களை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறோம்.

சனாதனம் என்பது வேறு, இந்து மதம் என்பது வேறு. நான் இரண்டு நாட்களுக்கு முன்பு கூட இதற்கு வாழைப் பழத்தை உதாரணமாக சொன்னேன். சனாதனத்தில் இருக்கின்ற பெண் கல்வி மறுப்பு, கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறுதல், பெண்களுக்கு எதிரான சமூக நீதி இவைகளைதான் நாங்கள் எதிர்க்கிறோமே தவிர சனாதனத்தை ஏற்றுக் கொண்டவர்களை எல்லாம் நாங்கள் எதிர்ப்பதாக அர்த்தமாகாது. ஆகவே இதற்கு ஒரு முற்றுப் புள்ளியாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தெளிவான அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்கள். அதுவே போதுமானது. வேலையற்ற வீணர்களின் வார்த்தைகளுக்கு பதில் சொல்லிக்கொண்டு எங்களுடைய நேரத்தை நாங்கள் செலவிட விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

## புழல் ஒன்றிய கழக அவைத்தலைவர்

# ர.செல்வமணி - அம்பிகா இல்லத் திருமண விழா!

## மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் , ஆவடி சா.மு.நாசர் பங்கேற்பு!

சென்னை, செப். 10-

சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய கழக அவைத் தலைவர் அழஞ்சிவாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ர.செல்வமணி அம்பிகா ஆகியோரின் மகன் செ.கோகுல் ஜோ. திவ்யதர்ஷினி திருமண விழா நாளை (11.09.2023 - திங்கட்கிழமை) காலை செங்குன்றம் நடராஜா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

வட்டக் கழக செயலாளர் பெ.சரவணன், ஊராட்சி மன்ற தலைவர் ச.பாரதி சரவணன், நா.ஜெகதீசன், செல்வி மதுரைமுத்து, ஆர்.முருகன், ராஜேஸ்வரி எத்திராஜ், எம்.அண்ணாதுரை, ஆர். வெங்கடேசன், சி.அற்புதராஜ், மு.ரமேஷ், ஆர். திராட்டில்லி, ஜி.சேகர். , ரா.சுந்தரவடிவேல் செ. மதுரைமுத்து, ஜி.சுரேந்தர், ஏ தினேஷ் குமார் ஆகியோர் வரவேற்புரையில் ஜி.ராஜேந்திரன், ஜெ. ஜெய்மதன், தங்கமணி திருமால், சாந்தி பாஸ்கரன், கே.தமிழரசிகுமார், ஆர்.இ.ஆர்.விப்ரநாராயணன், வி.திருமால், இரா.ஏ.பாபு ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

திருமணத்திற்கு மாவட்ட கழக செயலாளர்கள் மாதவரம் எஸ். சுதர்சனம், ஆவடி சா.மு. நாசர், கழக சட்டக் குழு உறுப்பினர் கி.வேணு, கழக ஆதிதிராவிடர் நலக் குழு தலைவர் க.சுந்தரம், தலைமை செயற்குழு உறுப்பினர் இ.ஏ.பி. சிவாஜி, பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன், இரா.கிரிராஜன் எம்.பி., வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, கனிமொழி சோமு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவள்ளுவர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பரந்தாமன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.